பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 05 திங்கட்கிழமை 19.05.2025 கதிர் 191

## இது ரகசியம் அல்ல!

வடக்கில்உள்ள5மாவட்டங்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய 4 மாவட்டங்களிலும் காணிகளை அரசுடைமையாக்கும் ☞2

# சுயாட்சியை வலியுறுத்தி அடக்குமுறைக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம்

## முள்ளிவாய்க்காலில் நேற்றுப் பிரகடனம்

தமிழ் மக்களின் சுயாட்சி அங்கீகரிக்கப் படுவதைவலியுறுத்தியும்இனஅடக்குமுறைக்கு எதிராகவும், விடுதலையை நோக்கியும் ஒன்றுபட்டு தொடர்ந்தும் போராடுவோம் என்று 2025 முள்ளிவாய்க்கால் பிரகடனம் சூளுரைத்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 16ஆவது ஆண்டு நிகழ்வு நேற்றையதினம் வடக்கு -கிழக்கு. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலில்அமைந்துள்ள நினைவுமுற்றத்தில்நடைபெற்றது. இதன்போது, அகத்தியார் அடிகளாரால் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் இன அழிப்பு, வரலாற்றுச் செயன்முறையூடு முள்ளிவாய்க்காலில் உச்சந் தொட்டு இன்றுடன் 16ஆண்டுகள் நிறைவடைகின்றன. இன்று வரைக்கும், கொல்லப்பட்ட இரத்தச்சொந்தங்களுக்கு ☞2

# யாழ். பல்கலைக்கழகத்திலும் நேற்று நினைவேந்தல் நிகழ்வு



யாழ்ப்பாணம் பல் கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ளமுள்ளிவாய்க் கால்நினைவுதூபிமுன்பாக நேற்று பல்கலைக்கழக மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் நினைவுதினமான நேற்று நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாண





வர்கள் , பேராசிரியர்கள் , விரிவுரையாளர்கள் , கல்விசார் , சாரா ஊழியர்கள் என பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டு சுடரேற்றி, மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

# பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச முயற்சிகளை கனடா நாடு ஆதரிக்கும்

## அதன் பிரதமர் கார்னி அறிக்கை



தமிழினப் படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூற லுக்கும், உண்மை, நீதி ஆகிய வற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கிறது. என்று கனடிய பிரதமர் கார்ணி தெரிவித்துள்ளார்.

தமிழ் இனப்படுகொலை நினை வேந்தல் நாளை முன்னிட்டு வெளி யிட்டுள்ள அறிக்கையிலேயே ☞2

# வெள்ளவத்தைக் கடற்கரையிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால்நினைவேந்தல்நிகழ்வுநேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உணர்வூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.வெள்ளவத்தை கடற்கரையில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, கடலலையில் பூக்கள் தூவப்பட்டு உயிர்நீத்த உறவுகளை பொதுமக்கள் நினைவுகூர்ந்தனர்.

நினைவேந்தல்அனுஷ்டிப்புநிறைவடைந்ததன் பின்னர் அங்கு கூடியிருந்தவர்களுக்கு கஞ்சி பகிரப்பட்டது. நினைவேந்தலுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சிங்கள ராவய அமைப்பினர் முற்பட்ட போது பொலிஸார் அதற்கு இடமளிக்கவில்லை.

2009 முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வு நேற்று காலை 10.30 மணியளவில் வெள்ளவத்தை கடற்கரையில் நடைபெற்றது.

யுத்தத்தில் கொல்லப்பட்ட, காணாமலாக்கப்பட்ட, காயமடைந்த தமது உறவுகளை நினைவுகூரும் மக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் நீதியையும், பொறுப்புக்கூறலையும் கோரும் வகையில் இந்த நினைவேந்தல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொதுச்சுடர் ஏற்றி நினைவேந்தல் அனுஸ்டிக் கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். சுமந்திரன் உட்பட சிவில் தரப்பினர், பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

இதன்போது கடலலையில் பூக்கள் தூவி உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவேந்தல் அனுஸ்டிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் சிங்கள ராவய அமைப்பினர் அவ்விடத்துக்கு வந்து நினைவேந்தலுக்கு இடையூறு விளைவிக்க முயற்சித்தனர். ☞8

# ஜனாதிபதி தலைமையிலேயே இன்று தேசிய போர் வீரர் தினம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் 16ஆவது தேசிய போர் வீரர்நினைவுநாள்இன்றுதிங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. கோட்டை ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள தேசிய போர் வீரர் நினைவு தூபியில் தேசிய போர்வீரர் நினைவு நாள் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ☞8

# சிங்கக் கொடியின் நிழலில் நிலைபெறவேண்டும் நாடு

## மகிந்த ராஜபக்ச இவ்வாறு அறிக்கை

பெரும் போராட்டம் மற்றும் உயிர் தியாகங்களுக்குமத்தியில்பாதுகாத்ததாய் நாடுதொடர்ந்துபாதுகாக்கப்படவேண்டும். நான் உயிருடன் இல்லாவிடினும் எமது அனைவரின்தாய்நாடுஇறையாண்மை மிக்க நாடாக சிங்க கொடியின் நிழலில் நிலைபெறவேண்டும். இதுவேஎனதுஒரே பிரார்த்தனை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

போர் வெற்றியின் 16ஆவது ஆண்டை முன்னிட்டு விசேட ஊடக அறிக்கை ஒன்றை நேற்று ☞2

# தனியார் காணிகளை அரசுடைமையாக்கும் நோக்கம் ஆளும்தரப்பிற்குக் கிடையாதாம்

## நடவடிக்கைகள் தற்காலிக நிறுத்தம் என்றும் அறிவிப்பு

தனியார் காணிகளை அரசுடைமையாக்கும் அல்லது கையகப்படுத்தும் நோக்கம் ஆளும்தரப்பிற்குக்கிடையாது. நில அளவை வரைபடப் பகுதிக்குள் உள்ள காணிகளின் உரிமை தனியாருக்குச் சொந்தமானதா அல்லது அரசுக்கு சொந்தமானதா என்பதைத் தனித்தனியாக அடையாளம் காணவே தீர்மானிக்கப்பட்டது. இதனூடாக காணிப் பிரச்சினைகளை முறையாகத் தீர்த்துக்கொள்ள முடியும். தீவின் அனைத்து மாகாணங்களிலும் காணி தீர்வுக் கான பூர்வாங்க அறிவிப்புக்களை வெளியிடுவதன் மூலம் நில தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வடக்கு மாகாணத்துக்கு மாத்திரம் விசேடமான முறையில் அறிவிப்புகள் ஏதும் வெளியிடப்படவில்லைஎன கமத்தொழில், கால்நடை ☞8

# புலிகள் என்ற பயங்கரவாத அமைப்பிடமிருந்து தாயத்தை விடுவித்த படையினருக்கு அஞ்சலி

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச செலுத்தினார்

கொடூரமான 30 ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டு வந்து தாயகத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாத அமைப் பிடமிருந்து விடுவித்து 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. தாய்நாட்டுக்காக தமது உயிரை தியாகம் செய்த, அங்கவீனமுற்ற சகல பாதுகாப்பு படை வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

16ஆவதுதேசியபோர்வீரர்நினைவு நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகால கொடூரமான போரை முடிவுக்குக் கொண்டு வந்து, வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய மலைநாட்டை ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைத்து, நமது ☞8

## இனி இது .....

நோக்கத்தோடு ஆளும்தரப்பு விடுத்த வர்த்தமானிஅறிவித்தல்மீதுநடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக காணி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

"1921ஆம் ஆண்டு 20ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2025.03.28 அன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட தீர்வுக்கான ஆரம்ப அறிவிப்புகள் தொடர்பாக சமூகத்தில் எழுந்துள்ள தவறான கருத்துக்கள் மற்றும் தவறான புரிதல்கள் நீங்கும்வரை, குறித்த வரைபடப் பகுதிகளில் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின்படி அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது." கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள காணிகளை அரசுடமையாக்கும் இந்த அறிவிப்பிற்கு எதிராக தமிழ்க் கட்சிகள் போர்க்கொடி தூக்கிய நிலையிலும், இந்த வர்த்தமானி அறிவித்தலை ஆளும்தரப்புத் திரும்பப்பெறவில்லை எனில் மே 28 முதல் ஆளும்தரப்புக்கு எதிராகப் பெரும் போராட்டம் வெடிக்கும் என்று அவை அறிவித்திருக்கும் நிலையிலும் ஆளும்தரப்பு இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

ஆளும்தரப்பின் இந்த நடவடிக்கை வெறும் கண்துடைப்பு மட்டுமே. காணிகளை அரசுடமையாக்கும் பகிரங்க அறிவிப்பைவிட இப்போதைய அறிவிப்பு நயவஞ்சகம் நிறைந்த, தமிழ்மக்களை அடிமுட்டாள்களாக்கி ஏமாற்றுகின்ற நடவடிக்கை. தமிழ்க் கட்சிகளின் போராட்ட அறிவிப்பு மற்றும் எதிர்ப்புக்குத் தாங்கள் மதிப்பளிப்பதாகக் காட்டிக்கொள்ளும் அதேநேரம் தமது உள்நோக்கத்திலிருந்து கிஞ்சித்தும் கீழிறங்கி வராத மொள்ளமாரித்தனம்.

நான் இவ்வளவு மோசமாக ஆளும்தரப்பை விமர்சிப்பதற்குக் காரணம் இருக்கின்றது. ஆளும்தரப்பு காணிகளை அரசுடமையாக்குவதற்காக வெளியிட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல் 1921ஆம் ஆண்டு 20ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச்சட்டத்தின்கீழ்வெளியிடப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின்படி அரசு அறிவித்த மூன்று மாதங்களுக்குள் தனியார் தமது காணி உரிமைகளை நிரூபிக்கவில்லை என்றால் அவை அரசுடமையாகிவிடும். அதாவது உரிமை கோரப்படாத காணிகள் எல்லாமே மூன்று மாத கால முடிவில் அரச காணிகள்தான். மே 28 முதல் ஆளும்தரப்பு தொடர் நடவடிக்கை எடுத்தால் என்ன எடுக்காவிட்டால் என்ன அவை அரசுக்குச் சொந்தமான காணிகள்தான் சட்டப்படி.

அப்படியிருக்க அந்த வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப்பெறாமல், அதன் மீது தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்வது மக்களை ஏமாற்றிஅவர்களின்காணிகளைஅபகரிக்கும் நயவஞ்சகத்தனம்தானே! ஆளும் தரப்பு அடுத்தகட்டநடவடிக்கைகளைஎடுக்கவில்லை என்றாலும் மார்ச் 28 அறிவிக்கப்பட்ட 2430 வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அனைத்துக் காணிகளும் மே 28 முதல் அரசுக்குச் சொந்தமானவையே. இந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற்றால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். அல்லது தீர்வு குறித்துப் பேசுவதற்கும் ஆராய்வதற்குமான அவகாசமாவது கிடைக்கும். அதைவிடுத்து, அடுத்த கட்ட நடவடிக்கையை ஒத்திவைப்பதற்கு அந்தச் சட்டத்தில் எதுவும் இல்லை. அறிவிக்கப்பட்ட காணிகளில் 3 மாதங்களுக்குள் ஒருவர் தனது உரித்தை நிரூபிக்கவில்லை என்னில் அது அரசுக்குச் சொந்தமான காணி ஆகிவிடும். அவ்வளவுதான்.

இது நன்கு தெரிந்திருந்தும், தமிழ் மக்களை ஏமாற்றிக் காணிகளை அபகரிக்கும் திட்டத்தோடு அடுத்த கட்ட நடவடிக்கையை நிறுத்தி வைப்பதாக அறிவித்திருப்பது நயவஞ்சகத்தனம்தானே! இப்போது, தமிழ்க் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? தமிழ்க் கட்சிகளின் தலைவர்களில் பலரும் சட்டத்தரணிகளாக இருக்கும் நிலையில் என்னைவிட இந்தச் சட்டத்தைப் பற்றி அவர்கள் நன்கு அறிவர். ஆளும்தரப்பு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு என்ன செய்யப்பார்க்கின்றது என்பதும் அவர்களுக்கு நன்குபுரி-யும். எனவே அவை ஆளும்தரப்பின் சூழ்ச்சிக்குப் பலியாகிவிடமாட்டா என்றே எதிர்பார்க்கின்றேன்.

..............................

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்ற இரு சபைகளின் தவிசாளர், உப தவிசாளர் பதவிகளுக்கான நியமனங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் ஏற்பட்ட குழப்பம் பற்றி நேற்று இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன். வெண்ணெய் திரண்டு வந்தபோது அவர் எப்படி தாழியை உடைத்தார் என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தேன். தன் வாயால் கெட்ட அவர், உருப்படியாக இருந்த சபைகளையும் கெடுத்துவிடுவாரோ என்கிற அச்சத்தையும் வெளிப்படுத்தியிருந்தேன். ஆனால்பெரும்குழப்பங்கள்எதுவும்இல்லாமல் மீண்டும் ஒரு தடவை தலைவர் சிவஞானம் எல்லாவற்றையும் சமாளித்துவிட்டார் என்று அறிய முடிந்தது.

சம்பந்தப்பட்ட சபைகளின் தவிசாளர், உபதவிசாளர்களாகப் பெயரிடப்பட்டவர்களை கட்சியின் செயலாளர் சுமந்திரனுடன் தொலைபேசி மூலம் பேச வைத்து, அவர்கள் அவரைக் கட்சியின் செயலாளராக ஏற்கிறார்கள், அதில் அவர்களுக்கு எந்தக் கருத்துவேறுபாடுகளும் இல்லை, சிறீதரனின் கருத்துத் தனிப்பட்ட கருத்து அது கிளிநொச்சி மாவட்டத் தமிழ் அரசுக் கட்சியினதோ தமது சபைகளின் உறுப்பினர்களதோ கருத்து அல்ல என்பதைத் தெளிவுபடுத்தியதைத் தொடர்ந்து, தான் ஏற்கனவே கையெழுத்திட்டுத் தயாராக வைத்திருந்த கடிதங்களை நேற்று தேர்தல்கள் திணைக்களத்திடம் கையளித்திருக்கிறார் சுமந்திரன்.

இந்த விவகாரம் குறித்து நான் நேற்று எழுதும்போது, "இப்போது கிளிநொச்சியின் இரு சபைகளின் தவிசாளர், உபதவிசாளர்களும் பெயரிடப்படுவது இடைநடுவில் நிற்கின்றது. இனி சுமந்திரனை சபை உறுப்பினர்கள் பொதுச் செயலாளராக ஏற்கிறார்களா என்பதைத் தெரிந்துகொண்டுதான் இந்த விடயத்தில் ஏதாவது முன்னேற்றம் ஏற்படமுடியும். சிறீதரனின் ஆதரவாளர்களான கிளிநொச்சி சபை உறுப்பினர்கள் அவரை எதிர்த்துக்கொண்டு, அவருக்கு மாறான நிலைப்பாட்டை எடுத்து சுமந்திரனை கட்சியின் பொதுச்செயலாளராக ஏற்றுக்கொள்கிறார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்" என்று தெரிவித்திருந்தேன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த முடிவுக்கு மாறாக தனி வேட்பாளரான அரியநேத்திரனை ஆதரிக்கவேண்டும் என்று முடிவெடுத்தது தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை. அதாவது கட்சித் தலைவர் சிவஞானம் மற்றும் பொதுச் செயலாளர் சுமந்திரன் (அப்போது அவர்கள் இந்தப் பதவிகளில் இல்லை) ஆகியோரை உள்ளடக்கிய மத்திய குழு எடுத்த முடிவை ஏற்க முடியாது என்ற அப்போதைய வேட்பாளரும் கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவருமான சிறீதரனின் முடிவை ஆமோதித்து, ஆதரித்தவர்கள்தான் இந்தக் கிளிநொச்சி மாவட்டக்கிளையினர். அப்படிப்பட்ட கிளைக்குள் இருப்பவர்கள்தான் இப்போது இந்த இருசபைகளிலும் உறுப்பினர்களாகவும் தவிசாளர், உபதவிசாளர்களாகவும் வந்துள்ளனர். எனவே அவர்கள் இந்தத் தடவையும் தமது மாவட்டக் கிளைத் தலைவருக்கு ஆதரவாக இருப்பார்களோ என்கிற எண்ணத்தில்தான் பொறுத்திருந்து பார்ப்போம் என்று தெரிவித்திருந்தேன்.

ஆனால், பதவி என்று வந்த பிறகு அண்ணன் என்னடா தம்பி என்னடா என்கிற வகையில் "சேர் நீங்கள்தான் கட்சிச் செயலாளர், எங்களுக்கு அதில் எந்தக் கருத்து முரண்பாடும் இல்லை. அது அவரது கருத்து" என்று படுத்தேவிட்டார்கள். அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா என்று கடந்து விடவேண்டியதுதான். எதுஎப்படியிருந்தாலும் விவகாரம்பூதாகாரமாகிப்பிரச்சினைவளராமல் தடுத்துவிட்டத்தில் தலைவர், செயலாளர் இருவருமேபாராட்டப்படவேண்டியவர்கள்தான். தமக்கு வயது மட்டுமல்ல அரசியல் முதிர்ச்சியும் அதிகம் என்பதை அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொறுப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் ஆயுதப்போர் முடிவடைந்து இன்றுடன் 16 வருடங்கள் ஆகிவிட்டன. 26 வருடங்களுக்கும் அதிகமாக நீடித்த இந்தப் போரில் பல பத்தாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

இந்தத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல்நாளில், இழந்தஉயிர்களையும், சிதறிப்போன குடும்பங்களையும், பேரழிவடைந்தசமூகங்களையும், இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருப்போரையும் நாம் நினைவுகூருகிறோம்.

அத்துடன், தமது அன்புக்குரியவர்களின் நினைவுகளைச் சுமக்கும் கனேடிய தமிழ்ச் சமூகத்தையும், கனடாவின் பல பகுதிகளிலும்திட்டமிடப்பட்டுள்ளநினைவேந்தல் நிகழ்வுகளையும் நாம் மனதிற்கொள்கிறோம்.

பொறுப்புக்கூறலுக்கும், உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும்ஆதரிக்கிறது. இந்தநினைவேந்தல் நாளை நாம் கடைப்பிடிக்கும்போது, துணிவுடன் அஞ்சலி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டையும், நீடித்திருக்கும் அமைதிக்காகச் செயற்படுவதற்கான உறுதிப்பாட்டையும் அது பலப்படுத்தட்டும் என்றார்.

## சிங்கக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார் அவர். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை தாய் நாடு பயங்கரவாதிகளின் பிடிகளில் இருந்து முழுமையாக விடுதலையடைந்துள்ளது. இலங்கையின் சகல நிலப்பரப்பிலும் மேன்மைப் பொருந்திய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் தான் நடைமுறையில் உள்ளன. சிங்க கொடியின் கீழ் ஐக்கியப்படுத்திய ஒற்றையாட்சி நாட்டில் 2019.05.19 ஆம் தினத்தன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மற்றும் முப்படைகளின்தலைவர்என்றஅடிப்படையில் ஆற்றிய வெற்றி உரையை ஒருபோதும் மறக்க முடியாது.

மிலேட்சத்தனமான பயங்கரவாத அமைப்பை முழுமையாக இல்லாதொழித்து, நாட்டு பிரஜைகள் அனைவரும் அனைத்துப் பகுதிகளிலும் அச்சமில்லாம் வாழும் உரிமையை உறுதிப்படுத்தவேண்டும்என்பதுஅனைவரது எதிர்பார்ப்பாக இருந்தது. மக்களின் தலைவர் என்ற அடிப்படையில் தனிப்பட்ட முறையில் நானும் இதனை எதிர்பார்த்தேன்.

2005ஆம் ஆண்டு நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் பயங்கரவாதிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய இராச்சியத்துக்குரிய தமிழீழ விடுதலைப் புலிகள் பரிபாலன கட்டமைப்பை உருவாக்கியிருந்தனர். பயங்கரவாதிகள் இராணுவம், கடற்படை மற்றும் வான்படை என்ற அடிப்படையில் நாட்டில் மூன்றில் ஒரு பங்கினையும் அதனுடனான வான்பரப்பையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். பயங்கரவாதிகள் பொதுமக்களையும், பொருளாதார கேந்திர மத்திய நிலையங்களையும் இலக்காகக் கொண்டு தாக்குதல்களை மேற்கொண்டனர்.

உலகில் பலம் வாய்ந்த நாடுகள் விடுதலை புலிகள் அமைப்பை கண்டு அச்சமடைந்த நிலையில் அந்த அமைப்புக்கு எதிர் தாக்குதல் நடத்த தீர்மானித்தேன். தமிழர்களுக்கு எதிராக நாங்கள் போர் செய்யவில்லை. தேவேந்திரமுனையில் இருந்து பருத்தித்துறை வரையில் வாழும் அனைவரும் எனது மக்களே.

கடனாவில் பிரம்டன் நகரில் அண்மையில் ஈழம் வரைபடத்தை நிர்மாணித்து தமிழ் இனப்படுகொலை நினைவகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. புலிகள் அமைப்பை இல்லாதொழித்து பல ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், பயங்கரவாதத்தின் இருண்ட நிழல் இன்றும் மறைமுகமாகச் செயற்பாட்டில் இருப்பதை வெளிப்படுத்தும் துரதிஸ்டவசமானதொரு விடயம் இதுவாகும்.

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள்படுகொலைசெய்யப்பட்டனர்என்று கனடாவின்பிரம்டன்நகரமேயர்பாரதூரமான குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார். போரை முடிவுக்கு கொண்டு வந்த அரச தலைவர் மற்றும் முப்படைகளின் தலைவர் என்ற அடிப்படையில் இந்த குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறேன்.

விடுதலைபுலிகள்தமிழ்மக்களைபணயக் கைதிகளாக வைத்திருந்த சந்தர்ப்பத்திலும், தமிழர்களை மனித குண்டுகளாக்கிய சந்தர்ப்பத்திலும் இராணுவத்தினர் போர்க் களத்துக்குச் சென்று மனிதாபிமான அடிப்படையில் தமிழர்களை பாதுகாத்தனர். இராணுவத்தினரால் அன்று பாதுகாக்கப்பட்ட தமிழர்கள் இதற்கு இன்றும் சாட்சியாக உள்ளார்கள் என்பதை நான் நம்புகிறேன். கன்னிவெடிகள் வெடிக்கைகள், துப்பாக்கி தோட்டாக்கள் வெடிக்கையில், விஷ வாயு தாக்குதல்கள் மற்றும் செல் தாக்குதல்கள் மேற்கொண்டபோது இராணுவத்தினர் சமவுரிமைக்காகப் போராடினர். தாய் நாட்டுக்காகதமதுவாழ்க்கையைஅர்ப்பணித்த படையினர் போர்க் குற்றமிழைக்கவில்லை என்பதை உறுதியாகக் குறிப்பிடுவேன். 2008 ஆம் ஆண்டு தோற்கடிக்க முடியாது என்று ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் எப்.பி.ஐ. நிறுவனம் பெயரிட்ட விடுதலைப் புலிகள் அமைப்பையே இலங்கை இராணுவத்தினர் தோற்கடித்தனர்.

போராட்டம் என்பது எமக்குப் புதியதல்ல, போராட்டத்தின் சுய ஒழுக்கம் எமக்கு உண்டு. எதற்கு எதிராக போராட வேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தோம். துட்டகைமுனு, வலகம்பா மற்றும் தாதுசேனன் ஆகிய அரசர்கள் எதிர்நாட்டு ஆக்கிரமிப்புக்களில் இருந்து நாட்டை பாதுகாத்து வீரத்தை உறுதிப்படுத்தினார்கள். 30 வருடகால பயங்கரவாதப்போரை முடிவுக்குகொண்டுவர பல்லாயிரக்கணக்கானஇராணுவத்தினர்உயிர் தியாகம் செய்தார்கள். இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்ட நாட்டை மண்டியிட்டு வணங்கினேன்.

பெரும் போராட்டம் மற்றும் உயிர் தியாகங்களுக்கு மத்தியில் பாதுகாத்த தாய் நாடு தொடர்ந்து பாதுகாக்கப்படவேண்டும். நான் உயிருடன் இல்லாவிடினும் எமது அனைவரின் தாய் நாடு இறையாண்மை மிக்க நாடாக சிங்க கொடியின் நிழலில் நிலைபெறவேண்டும். இதுவே எனது ஒரே பிரார்த்தனை. ஒற்றையாட்சி நாட்டுக்காக 16 ஆண்டுகள்போர்க்களத்தில்போராடிஉயிர்நீத்த முப்படையினர் மற்றும் தற்போது விசேட தேவையுடையவர்களாக உள்ள படையினர் மற்றும் சகல பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் உயரிய கௌரவமளிக்கிறேன் - என்றார்.

## சுயாட்சியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு நடுகற்களின்றி, அவர்கள் இலங்கை அரசினால் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்ட மண்ணில், அவர்களின் இரத்தம் தோய்ந்த புனித பூமியில், அவர்களின் தேசத்திற்கான கனவுகளை அகவயப்படுத்தி, சுதந்திர வேட்கைக்கான மூச்சுக் காற்றுடன் கலந்து , எமது இன அடக்குமுறைக்கெதிரான விடுதலைப் போரை வன்முறையற்ற வழியில் முன்னெடுக்க, உறுதி பூண , முள்ளிவாய்க்கால் திடலில் இன்று ஒன்று கூடியுள்ளோம்.

சிங்கள -பௌத்த பேரினவாதம் இந்தத்தீவின் சக தேசமான தமிழர்களை அழிக்கவும் அடக்கியாளவும் வெற்றி கொள்ளவும்கடந்த எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்ட வகையில் செய்துவரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் காரணமாக தமிழ்தேசம் படிப்படியாக அழிந்துவருகின்றது. இன அழிப்பு யதார்த்தத்தின் விளைவாக எமது இருப்பை பாதுகாப்பதற்கும், உரிமைகளைப் பெறுவதற்குமாக எழுந்த அசாத்தியமானதும், ஈகங்கள் நிறைந்ததுமான உரிமைப் போராட்டத்தினதும் விடியலுக்காக ஒரு தேசமாக நாங்கள் அணி திரண்டு நின்றதற்கானதுமான அடையாளமாகவும் உள்ள முள்ளிவாய்க்காலையும் நாம் இன்று நினைவு கூருகின்றோம்.

இலங்கைத் தீவில் சமூகங்கள் இனவாதமயப்படுத்தப்பட்டு ஜனநாயக வாக்குத் தெரிவினூடாக பிரதிநிதிகள் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட முறையிலிருந்து, இன்னும் வரலாற்றை பின்நோக்கி நகர்த்துகின்றபோது , வெவ்வேறு அரசாட்சிப் பரப்புக்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, மையத்தை நோக்கி அதிகாரங்கள் குவிக்கப்பட்டு, ஒற்றையாட்சி அரசியல் அலகில் பெரும்பான்மையினரிடம் காலனித்துவம் ஆட்சியை கைமாற்றுகையில், தமிழ் இன அழிப்புக்கான வரலாற்றுச் செயன்முறை உருவாக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்டதை வரலாறு தெட்டத்தெளிவாக ஆவணப்படுத்தியுள்ளது. தமிழ் இன அழிப்பில் பிரித்தானிய

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# தம்பலகாமத்தில் நினைவேந்தல்

(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் கள்ளிமேட்டு பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த கஞ்சி வழங்கும் நினைவேந்தல் நிகழ்வை அப்பகுதி இளைஞர்கள் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தினை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.

இதன் போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.





இந்நிகழ்வில்இளைஞர்கள்,காணாமற்போனோரின் உறவுகள், , சமூகச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்ததோடு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர். நிகழ்வு, சமூக நினைவாற்றலை பாதுகாத்து, இனநீக்கம், உயிரிழப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் எதிர்வினையாகவும் அமைந்தது.

மே மாதம் 12 தொடக்கம் 18 வரை முள்ளி வாய்க்கால் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர் தாயகங்களில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விசேடமாக நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இறுதி யுத்தத்தின் போது இனப்படுகொலைகளுக்கான நீதியை தற்போது நினைவேந்தலில் மக்கள் மனவேதனையுடன் வேண்டி நிற்கின்றனர்.

## திருக்கோவிலிலும் நினைவேந்தல் எதிர்காலத் தவிசாளரும் பங்கேற்பு

(சகாதேவராஜா)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான நேற்று திருக்கோவில் தம்பிலுவில் இடம்பெற்ற நிகழ்வில் திருக்கோவில் பிரதேசசபையை கைப்பற்றிய சுயேச்சை குழு ஒன்றின் தலைவர் எதிர்கால தவிசாளர் பிரபல தொழிலதிபர் சுந்தரலிங்கம் சசிகுமார் கலந்துகொண்டார்.





தேவசேனா அமைப்பு வருடாந்தம் நடத்தி வருகின்ற மே18 முள்ளிவாய்க்கல் நினைவேந்தல் அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று திருக்கோவில் தம்பிலுவில் பொதுச்சந்தைக்கு முன்னால் நடைபெற்றது.

இதன்போதுதிருக்கோவில்பிரதேச சபைக்காக தெரிவு செய்யப்பட்ட சுயேச்சை குழு தலைவர் எதிர்கால தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்ட அனைவருக்கும் கஞ்சி வழங்கப்பட்டது.

## முள்ளிவாய்க்கால் நினைவு கண்ணீர் மல்க அனுஸ்டிப்பு

### வவுனியாவில் நடந்தது

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் முள்ளிவாய்க் காலில்உயிர்நீத்தவர்களுக்கான 16ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு வவுனியாவில் கண்ணீர் மல்க நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அனுஸ்டிக்கப்பட்டது.



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் 3011 ஆவது நாளாக போராட்டம் மேற்கொண்டு வரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக உள்ள கொட்டகையில் குறித்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்த உறவுகளுக்காக கண்ணீர் மல்கி கதறியழுத உறவுகள் அகவணக்கம் செலுத்தி, ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செய்யப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள் -

இந்தநாள்மிகவும்வேதனையானது. போரின் கொடூரமான முடிவை நினைவூட்டுகிறது, அங்கு ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அந்தப் போர் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவாக மட்டுமல்ல, தமிழர் துன்பங்களுக்கு உலகளாவிய அலட்சியத்தின் விளைவாகவும் இருந்தது. முழு உலகமும் நம்மைப் புறக்கணித்தது, முள்ளிவாய்க்காலை தமிழர் நம்பிக்கைகளின் கல்லறையாக மாற்ற அனுமதித்தது.

இன்று, முள்ளிவாய்க்கால் நாளில், உலகிற்கு நினைவூட்டுகிறோம் எங்கள் வலி தொடர்கிறது, எங்கள் போராட்டம்தொடர்கிறது, நீதி மற்றும் சுதந்திரத்திற்கான எங்கள் கோரிக்கை ஒருபோதும் அமைதியாகாது எனத் தெரிவித்தனர். 100







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## சட்டத்திற்கும் உரிமைக்கும் இடைப்பட்ட அரச நடனம்

1921ஆம் ஆண்டு 20ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டம் என்பது, பிரிட்டிஷ் குடியேற்ற கால ஆட்சிச் சட்டங்கள் வகையில் ஒன்றாகும். இச்சட்டத்தின் மூலம் ஆளும்தரப்பிற்கு ஒரு குறிப்பிட்ட நிலத்தில் உரிமை உரித்தாக்கம் செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு நிலத்தை உரிமை கோரும் தனிநபர்கள் இல்லை என்றால், அதுவரையில் யாருக்குரியது என்று அடையாளம் காணப்படாதி–ருக்கும் நிலத்தை இந்தச் சட்டத்தின் மூலம் அரசு தனது உடமையாக்கிக்கொள்ள முடியும். ஆனால், இச்சட்டம் இயல்பாகவே காலம் கடந்ததும், நவீன அரசியல் சூழலுக்கேற்றதில்லை என்பதும் நிலையான விமர்சனமாகவே இருந்து வருகிறது.

2025 மார்ச் 28ஆம் தேதி 2430ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமாக, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்கு மாவட்டங்களிலுள்ள சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகள் அரசுடமையாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு ஏற்ப, நீண்ட காலமாக வாழ்ந்து வந்த மக்களின் பூர்வீக உரிமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. அதன் பின்னர் ஏற்பட்ட மக்கள் எதிர்ப்புகள், சட்டவியலாளர் விமர்சனங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளின் குரல்கள் இப்போது அரசைத் தற்காலிகமாக அந்த நடவடிக்கைகளை நிறுத்துவதாக அறிவிக்க வைத்துள்ளன. ஆனால் சட்டப்படி இது ஒரு ஏமாற்று வேலை.

இங்கு முக்கியமாக கேள்விக்குள்ளாகுவது இந்த அறிவிப்பு சட்டப்படியானதா என்பதுதான்.

1921ஆம் ஆண்டு சட்டத்தில் காணியின் உரிமை நிர்ணயச் சட்டத்தின்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட மூன்று மாத காலப் பகுதிக்குள் உரித்து நி–ரூபிக்கப்படாத காணிகள் அனைத்தும் அரசுக்குரியவையே. அதனடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆளும்தரப்பு நிறுத்துவது என்பது அரசுடமையாக்கப்பட்ட காணிகளில் அரசு தனது அதிகாரத்தைச் செலுத்துவதை நிறுத்துவதுதான். ஆனால் அந்தக் காணிகள் அரசுக்குரியவையாகிவிடும். தமது காணி உரித்துக்களை நிரூபிப்பதற்கு, புலம்பெயர்ந்தும் இடம்பெயர்ந்தும் போரால் ஆவணங்களை இழந்தும் உள்ள மக்களுக்கு போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் இந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறவேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் கோரிக்கையாக இருக்கிறது. ஆனால் அதற்குள் கபட நாடமாடப்பார்க்கிறது ஆளும்தரப்பு. இது கண்டிக்கத்தக்கது.

அதிகம் செயல்படும் அரசுத் திணைக்களமொன்றாக காணி அமைச்சு இருக்க, இவ்வாறு சட்ட ரீதியான ஆலோசனை இன்றி இவ்விதமான மாபெரும் அறிவிப்பு செய்வது அரசியலாதீத செயல்பாடு எனவே கருதப்பட வேண்டும். இது, தமிழர்களின் நிலவுரிமையைக் கேள்விக்குட்படுத்தும், இனப் பிரச்சினைக்கான காரணங்களில் ஒன்றாகும் என்பதையும் மறந்துவிடலாகாது.

தமிழ் மக்களின் பூர்வீக உரிமைகள் என்பது சட்டத்தால் மட்டுமல்ல, மனித உரிமையாலும் அரசியல் நியாயத்தாலும் தீர்மானிக்கப்படவேண்டியது. ஆகவே, இச்சட்டத்தைக் கொண்டு நடத்தப்படும் அரச முடிவுகள் மக்கள் உரிமையை பாதிப்பதாய் அமைந்தால், அதனை எதிர்க்கும் சட்டரீதியான மற்றும் மக்களரசியலியல் செயற்பாடுகள் தொடரவேண்டும்.

# உலக அரசியலில் தமிழர்கள்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உலக அரசியலில் அதிகரிக்கும் தமிழர்களின் செல்வாக்கால், பூகோள அரசியல் நகர்வுகளுக்கு ஏற்ப தமிழர்கள் தமக்குள் இருக்கும் முரண்பாடுகளை மறந்து ஓரணியில் கைகோர்த்து செயல்பட வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

உலக அரங்கில் தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பல்வேறு நாடுகளில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த நிலை ஈழத் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் பெரும் பலமாக அமைய சாத்தியங்கள் என பல சிங்கள ஊடகங்கள் அச்சத்தை அள்ளித் தெரிவிக்கின்றன.

### ஆஸி தேர்தலில் ஈழத்தமிழ் அஷ்வினி வெற்றி !

அவுஸ்திரேலிய பாராளுமன்ற தேர்தலில் அஷ்வினி எனும் ஈழத்தமிழ் வம்சாவளியை




சேர்ந்த பெண் பெருவெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அஷ்வினி அம்பிகைபாகர்(Ash Ambihaipegar), ஈழத்தில் புகழ் பெற்ற, குழந்தை கவிஞர் அம்பி அம்பிகைபாகர் அவர்களின் பேத்தி ஆவார். சிட்னியில் உள்ள பார்ட்டன்(Barton) தொகுதியில் தொழிற் கட்சி சார்பில் போட்டியிட்டு வென்றுள்ளார்.

அத்துடன் 66 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்று வெற்றியீட்டி அவுஸ்திரேலிய பாராளுமன்றம் செல்கிறார். வெற்றியீட்டியிருக்கும் தமிழ்ப் பெண்ணான அஷ்வினி அம்பிகைபாகர் உலகத்தமிழருக்குப் பெருமை சேர்ப்பவராக அமைகிறார். 2022 இல் கோர்ஜெஸ்றிவர் கவுன்சிலராகத் தெரிவாகியிருந்த அவர் ஒரு சட்ட நிபுணராகவும் பயிற்றப்பட்டவர்.

அவுஸ்திரேலிய கடந்த பாராளுமன்றில் ஆட்சியில் இருந்த தொழிற் கட்சி தேர்தலுக்கு முன் 77 ஆசனங்களும் , எதிர்க்கட்சி 53 ஆசனங்களையும் கொண்டிருந்தது. ஆனால் தற்போதய தேர்தலில் எதிர்க்கட்சி பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. குடிவரவுக் கொள்கையில் மாற்றம், அகதிகள் விரோத நடவடிக்கையே எதிர்கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அவுஸ்திரேலியாவில் கடந்த ஐந்து வார தேர்தல் பிரச்சாரத்தின் போது எதிர்கட்சி தலைவர் பீட்டர் டட்டனை விட சிறப்பாக செயல்பட்ட பிரதமரின் ஆளும் கட்சி இத் தேர்தலில் வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளதாக கருத்து கணிப்புகள் முன்பே தெரிவித்தன.

அதற்கேற்ப தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, பெரும்பான்மை அரசாங்கத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. அந்தோணி அல்பானீஸ் தலைமையில் இரண்டாவது முறையாக அமையும் அரசில் ஈழத்தமிழ் பெண் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கனடாவில் ஈழத் தமிழர் வெற்றி:

2025 இத் தேர்தலில் ஈழத் தமிழர்கள் ஹரி ஆனந்தசங்கரி, யுவனிதா நாதன் வெற்றி பெற்றுள்ளனர். அதே போல், சென்னையை பூர்வீகமாகக் கொண்ட அனிதா ஆனந்த் வெற்றி பெற்றுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் 6 தமிழர்கள் போட்டியிட்ட நிலையில், 3 பேர் வெற்றி பெற்றுள்ளனர். தற்போது வெற்றி பெற்றுள்ள அனிதா ஆனந்த் கனடாவின் ஒக்வில் கிழக்கு தொகுதியிலும், கேரி ஆனந்தசங்கரி ஸ்கார்பரவ்ப் பார்க் தொகுதியிலும், பிக்கொர்லின் புருக்லிவ் தொகுதியில் யுவனிதா ஆகியோர் போட்டியிட்டு வென்றுள்ளனர்.

அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று லிபரல் கட்சி ஆட்சி அமைய உள்ள நிலையில், அனிதா ஆனந்த், ஹரி ஆனந்தசங்கரி ஆகியோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக அரங்கில் கனடாவின் அரசியலில் தமிழர்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறும் சந்தர்ப்பங்களும் உருவாகியுள்ளது. கடந்தமுறை ஹரி ஆனந்த சங்கரி நாடாளுமன்றத்துக்கு தெரிவானதுடன், அமைச்சுப் பொறுப்புக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று கனடாவின் ஒன்றாரியோ மாகாணம் மற்றும் ரொறன்ரோ மாநகரசபை ஆகியவற்றில் தமிழ் மக்கள் ஓரளவு அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாக உள்ளனர்.




விஜய் தணிகாசலம்(Scarborough—Rouge Park), லோகன் கணபதி (Markham—Thornhill) ஆகியோர் ஒன்ராறியோ மாநில சட்டமன்ற உறுப்பனர்களாக(MPP) இருக்கின்றனர். விஜய் தணிகாசலம் மனநலம் மற்றும் போதைப்பொருள் ஒழிப்புத் துறை இணை அமைச்சராக பதவி வகிக்கின்றார், சிவப்பு நாடா குறைப்பு அமைச்சரின் நாடாளுமன்ற உதவியாளர் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான நிலைக்குழுவின் உறுப்பினர் நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான நிலைக்குழு உறுப்பினராக லோகன் கணபதி பதவி வகிக்கின்றார்.

இவர்களை விடவும் பார்த்தி கந்தவேள் ஸ்காபரோ தென் மேற்கு தொகுதி (Scarborough Southwest) ரொறன்ரோ மாநகர சபை உறுப்பினராக உள்ளார். தவிரவும் ரொறன்ரோ கல்விச்சபை அறங்காவலர்களாக(TDSB) நீதன் சான் 17ம் வட்டாரத்திலும் யாழினி ராஜகுலசிங்கம் 21ம் வட்டாரத்திலும், அநு சிறீஸ்கந்தராஜா 22ம் வட்டாரத்திலும், பதவி வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரித்தானியவில் தமிழ் பெண் எம்.பியாக வெற்றி:

கடந்த ஆண்டு 2024 பிரித்தானியத்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# உலக அரசியலில் ...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

தேர்தலில் தமிழ் பெண்ணின் வெற்றியானது, ஈழத் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் பெரும் பலமாக அமைய சாத்தியங்கள் என பல சிங்கள ஊடகங்கள் அச்சத்தை அள்ளித் தெரிவிக்கின்றன.

பிரித்தானிய 2024 தேர்தலில் எட்டு தமிழர் கள் வேட்பாளர்களாக போட்டியிட்டு இருந்தனர். உமா குமரன், கவின் ஹரன், மயூரன் செந்தில் நாதன், கமலா குகன், டெவினா பால், நரணி ருத்ரா ராஜன், கிரிஷ்ணி, ஜாஹிர் உசேன் ஆகியோர் பிரித்தானிய நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட்டி யிட்டிருந்தனர்.



இவர்களுள் தொழிலாளர் கட்சியின் சார்பாக உமா குமாரன் (Uma Kumaran) போட்டியிட்டு வெற்றி பெற்றார். வரலாற்றில் முதல் முறைமயாக பிரித்தானியாவில் பல தமிழர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிட் டதால் உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் இந்தத் தேர்தலை உற்று நோக்கி வந்தனர்.

இந்நிலையில், 19,145 வாக்குகளை பெற்று உமா குமரன் பெரும் வெற்றியடைந்தார். இந்த வெற்றியின் மூலம் பிரித்தானிய வரலாற்றில் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வரலாற்று சாதனையை உமா குமரன் படைத்துள்ளார்.

எதிர்த்துப் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்களையும் விட பல மடங்கு அதிக வாக்குகளைப்பெற்றுஉமாகுமரன்வெற்றிபெற்றுள்ள இவ்வரலாற்று சாதனையை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க தேர்தலிலும் தமிழர்கள் போட்டி:

கடந்த காலங்களில் அமெரிக்க தேர்தலிலும் சில தமிழர்கள் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே, உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் அரசியல் செல்வாக்கு அதிகரித்து வருவதால் இவர்கள் அனைவரும் ஒரு பொது இணக்கப்பாட்டுடன் செயல்படும் தேவை எழுந்துள்ளது.

## புலம்பெயர் நாடுகளில் வெற்றி பெற்ற பெண் எம்பிக்கள்:

இலங்கை தமிழர்கள் புலர்ந்த நாடுகளில் இதுவரை ஆறு பெண்கள் நாடாளுமன்ற தேர்தல்களில் வெற்றி பெற்று உள்ளார்கள். நிச்சயமாக இந்த வெற்றிகள் நாம் கொண்டாட கூடிய விடயம்தான். புலம்பெயர் இலங்கை தமிழர் வாழும் நாடுகளில் அதிகமான அளவில் அந்தந்த நாட்டு தேர்தல்களில் அதிகம் பங்கு போற்றுகிறார்கள்.

இதற்கு தாங்கள் வாழும் புலம் பெயர்ந்த நாட்டின் அரசியல் சமூக சிந்தனை மற்றும் அந்நாடுகளின் வரலாறு போன்றவற்றில் உள்ள புரிந்துணர்வுதான் காரணமாக இருக்கும் என கருதப்படுகிறது.

இவர்களில்பெருமைக்குஉரியபெண்நாடாளுமன்ற உறுப்பினர்கள், கனடா ராதிகா சித்சபேசன், நோர்வே கம்சி குணரத்தினம், நியூ சிலாந்து வருஷி வால்டேர், இங்கிலாந்து உமா குமரன், கனடா ஜுவனிதா நாதன், ஆஸ்திரேலியா அஷ்வினி அம்பிகைபாகர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

## ராதிகா சித்சபேசனின ஆவணப்படம்:

கனடாவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைப் பாதுகாவலரும் செயற்பாட்டாள ருமான ராதிகாவின் ஆவணப்படமான ரே ஒப் ஹோப் (நம்பிக்கையின் ஒளிக்கீற்று) ஸ்காப்ரோவில் (Scarborough) திரையிடப்பட்டது.

ராதிகா 1987 ஆம் ஆண்டு தனது ஐந்து வயதில் தமது குடும்பத்துடன் கனடாவுக்குத் தப்பிச் சென்றார். இந்தநிலையில் ரே ஓஃப் ஹோப், (Ray of Hope)ஆவணப்படமானது இலங்கையில் 26 ஆண்டுகால ஆயுதப் போராட்டம் மற்றும் தமிழ் மக்களின் இனப்படுகொலையின் தாக்கங்களையும், தமிழ் புலம்பெயர்ந்தவர்களின் தனிப்பட்ட கதைகளையும்அனுபவங்கள்மூலம்ஆராய்ந்துள்ளார்.

எங்கள் மூதாதையர் தாயகமான தமிழ் ஈழம், ஏராளமான விளை நிலங்களையும், ஏராளமான கடற்கரைகளையும்கொண்ட அழகியமற்றும்வளமான இடமாக அறியப்படுகிறது. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுமென்றே, திட்டமிட்ட மற்றும் நடந்துகொண்டிருக்கும் தமிழ் இனப்படுகொலையால், பல தமிழர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உலகின் பல



பகுதிகளில் பாதுகாப்பைத் தேடிக்கொண்டனர், அந்த வகையில் கனடாவில் மிகப்பெரிய புலம்பெயர்ந்த மக்கள் வசிக்கின்றனர்.

## நோர்வேயில் கம்சி குணரத்தினம்:

கம்சாயினி குணரத்தினம் இலங்கைத் தமிழ் பின்பு லம் கொண்ட நோர்வே தொழிற் கட்சி அரசியல்வாதி ஆவார். 2021 நோர்வே நாடாளுமன்றத் தேர்தலில் இவர் ஒஸ்லோ தொகுதியின் தொழிற் கட்சியின் இரண்டாவது வேட்பாளராக நியமிக்கப்பட்டு தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

இவர் ஒஸ்லோ மாநகரத்தின் துணை முதல்வராக 2015 முதல் 2021 வரை பதவியில் இருந்தார். யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம் பிறந்தவர், தனது மூன்றாவது வயதில் 1991 இல் பெற்றோருடன் புலம் பெயர்ந்து நோர்வே சென்றார். அரசியலில் கம்சாயினி தொழிற்கட்சியின் ஒஸ்லோ மாநகரக் கிளை துணைத் தலைவராகவும், இளைஞர் பிரிவுத் தலைவராகவும் பணியாற்றி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அரசியலில் அதிகரிக்கும் தமிழர்களின் செல்வாக்கால், பூகோள அரசியல் நகர்வுகளுக்கு ஏற்ப தமிழர்கள் தமக்குள் இருக்கும் முரண்பாடுகளை மறந்து ஓரணியில் கைகோர்த்து செயல்பட வேண்டும் என்பதே அனைவரது எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

தற்போதய கனடா, அவுஸ்திரேலிய கடந்த வருட பிரித்தானியத் தேர்தல் வெற்றி, ஈழத் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் பெரும் பலமாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அதேபோன்று இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் மேற்கத்திய அரசியலில் செல்வாக்கும் செலுத்தும் நபர்களாக உள்ளனர்.

இவர்களும் ஈழத் தமிழர்களும் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களுக்கான பொது அரசியல் கோட்பாடுகளை வகுத்து செயல்படுவதன் மூலம் சர்வதேச ரீதியில் தமிழர் உரிமைக்கான அழுத்தங்களை பிரயோகிக்க முடியும்.




### வவுனியா மாநகர சபையில்

# ஐக்கிய மக்கள் சக்தியின் போனஸ் ஆசனத்தை பெறுவதில் தமிழ், முஸ்லிம்கள் கடும் போட்டி

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வவுனியா மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த இரு போனஸ் ஆசனங்களையும், ஒரே வட்டாரத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த இரு முஸ்லிம் உறுப்பினர்களுக்கு வழங்க முயற்சி எடுத்து வருவதாக கட்சியில் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் வவுனியா மாவட்டத்தில் அதன் அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினி மற்றும் குறித்த கட்சியில் கூட்டணி அமைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் ஆகியோர் வவுனியா மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்தி இருந்தனர்.

இதில் வவுனியா மாநகரசபையில், ஐக்கிய சக்தியில் நேரடி வேட்பாளர்களாக தாண்டிகுளம், பண்டாரிக்குளம், வைரவபுளியங்குளம், குடியிருப்பு, மூன்றுமுறிப்பு, இறம்பைக்குளம், சின்னப்புதுக்குளம், கோவில்குளம் ஆகிய 8 வட்டாரங்களில் தமிழ் வேட்பாளர்களும், பட்டானிச்சி புளியங்குளம் (இரட்டை தொகுதி), கடைவீதி ஆகியவற்றில் முஸ்லிம் வேட்பாளர்களும் போட்டியிட்டு இருந்தனர்.

இந்நிலையில் நேரடியாக அதிக தமிழ் வேட்பாளர்கள் பெற்றுக் கொடுத்த வாக்கின் அடிப்படையில் இரு போனஸ் ஆசனங்கள் வவுனியா மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்திருந்தது. குறித்த இரு போனஸ் ஆசனத்தையும் இரட்டைத் தொகுதிகளைக் கொண்ட பட்டானிச்சி புளியங்குளம் பகுதியில் போட்டியட்டு தோல்வியடைந்த ஒரே வட்டாரத்தைச் சேர்ந்த இரு முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு ஐக்கிய மககள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் அக் கட்சியில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் அவர்களின் முடிவால் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

தமிழ் உறுப்பினர் ஒருவரையாவது நியமிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். இது தொடர்பில் கட்சி தலைவரும், எதிர்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ கவனம் செலுத்த வேண்டும் எனவும் வேட்பாளர்கள் கோரியுள்ளனர். 100

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் யுனிசெவ் பிரதிநிதிகளுடன் விசேட கலந்தாய்வு

(அபு அலா, துஷாரா, ஜெபி ஜனார்த்)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான யுனிசெவ் பிரதிநிதிகளுடனான விசேட கலந்துரையாடலொன்று சனிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் தலைவி ரியோனா உள்ளிட்ட யுனிசெவ் நிறுவனத்தின் உயரதிகாரிகள், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்ட அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகள், குழந்தைகளுக்கெதிரான வன்முறைகள், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேவைத்தரத்தை மேம்படுத்தல், ஒட்டுமொத்த குழந்தை பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தல்,

மாவட்டத்தில் பாதிக்கப்படும் சிறுவர் சிறுமிகளை பாதுகாப்பதில் அரச உத்தியோகத்தர்களின் வகிபாகம், அதனை நடைமுறைப்படுத்தும் அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாடசாலை இடைவிலகல், சிறுவர் துஸ்பிரயோகம், தற்கொலை முயற்சிகளை முறியடித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக மிக விரிவாக ஆராயப்பட்டது.

எதிர்காலத்தில் மாவட்ட மட்டத்தில் பாதிக்கப்படும் சிறுவர் சிறுமிகளை பாதுகாப்பதில் கையாள வேண்டிய விடயங்கள், சிறுவர் நேய அலுவலகங்களாக மாற வேண்டிய அலுவலகங்கள் தொடர்பாகவும் மாவட்ட அரசாங்க அதிபரால் இதன்போது ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.





## முள்ளிவாய்க்கால் போன்றதொரு அவலம் உலகில் வேறு எங்குமே இடம்பெறக்கூடாது

### இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

(சுபேசன்)




முள்ளிவாய்க்கால் போன்றதொரு அவலம் எதிர்காலத்தில் உலகின் எந்த மூலையிலும் இடம்பெறக்கூடாது என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தனது அறிக்கையில்; –

நாட்டில் மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தால் நாம் இழந்தவை ஏராளம்.

அந்த யுத்தம் மௌனித்து இன்று 16 வருடங்கள் கடக்கின்ற போதிலும் யுத்த வடுவில் இருந்து எம்மால் முழுமையாக மீள முடியவில்லை.

பத்து மாதம் கருவில் சுமந்த பிள்ளையை 16 வருடங்கள் கடந்தும் தேடி அலையும் தாய்மார்கள் எம் மண்ணில் ஏராளம். அவ்வாறு தேடி அலைந்தும் தமது தேடல் தாகம் தீராமல் உயிர் பிரிகின்ற அந்த வலி உலகில் எந்தத் தாய்க்கும் வந்துவிடக்கூடாது.

உள்நாட்டு யுத்தம் கல்வி, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலுமே எம்மை பின்தங்க வைத்துவிட்டது.

அந்த அபிவிருத்தி இடைவெளி மீளவும் நிரப்பப்பட வேண்டும்.

அடியோடு வீழ்த்த எம் மக்கள் இன்று ஒவ்வொரு செங்கல் செங்கல்லாக தமது வாழ்வை கட்டியெழுப்பி வருகின்றனர்.

முப்பது வருடங்களைத் தொலைத்து – உறவுகளைத் தொலைத்து – உடைமைகளை இழந்து சொல்ல முடியாத துயர்களை மனங்களில் தாங்கி மெல்ல அதில் இருந்து மீண்டு வருகின்றோம்.

யுத்த வடுக்கள் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தி விடும் என்பதற்கு எமது நாடு மற்றும் பிரதேசம் சிறந்த எடுத்துக்காட்டு.

முள்ளிவாய்க்கால் போன்றதொரு அவலம் இனி உலகின் எந்தவொரு மூலையிலும் நிகழந்திடக் கூடாது என்பதில் உலக நாடுகள் உறுதியாக இருக்க வேண்டும்.

அதே நேரம் நாட்டுக்குள் இன – மத – சாதி – மொழி ரீதியான குரோதங்களைக் கடந்து அனைவரும் மனிதநேயம் உள்ள மனிதர்களாக இந்த அழகிய வாழ்வினை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் சவூதி அரேபிய தூதருடன் சந்திப்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியை, வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது –

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவருடன் ஒரு சுமுகமான மற்றும் பயனுள்ள சந்திப்பை மேற்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதன்போது, பல்வேறுபட்ட சமகால பிரச்சினைகள் குறித்து நாங்கள் விரிவாகக் கலந்துரையாடினோம். மேலும், நமது இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராய்ந்தோம். இதேவேளை, தூதுவரின் அன்பான விருந்தோம்பலையும், இருதரப்பு உறவுகளை வளர்ப்பதற்கான அவரது தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் நான் பாராட்டுகிறேன். – என்று குறிப்பிட்டுள்ளார்.

# உயர் குருதி அழுத்த தினம்: விழிப்புணர்வு நடைபவணி

(ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் (மே 17) உலக உயர்குருதி அழுத்த தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவணியும் உணவுக் கண்காட்சியும் கருத்தரங்கும் பிராந்திய தொற்றா நோய்கட்டுப்பாட்டுப்பிரிவின் ஏற்பாட்டில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

'உங்கள் இரத்த அழுத்தத்தை துல்லியமாக அளவீட்டு, அதனைக் கட்டுப்படுத்தி, நீண்ட நாள்கள் உயிர் வாழுங்கள் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விழிப்புணர்வு நடைபவணி நிகழ்வும் இடம்பெற்றதோடு, இந்நடைபவணியில் 'இலங்கையில் 83 சதவீதமான உயிரிழப்பு தொற்று நோய்களினால் ஏற்படுகின்றது', 'உயிரிழப்பை ஏற்படுத்தும் தொற்றா நோய்களில் மாரடைப்பு, பக்கவாதம் என்பன பிரதான காரணியாகும்', 'இலங்கையில் மூன்றில் ஒருவர் உடல் அசைவு அற்றவர்களாக உள்ளனர்', 'உடற்பயிற்சி உயர் குருதி அமுக்கத்தைக் கட்டுப்படுத்த உதவும்', 'இலங்கையில் 70 சதவீதமானவர்கள் அவசியமான அளவு மரக்கறி, பழங்கள் உட்கொள்வதில்லை' என்ற சுலோகங்களை ஏந்தியவாறு பொதுமக்களும், தாதியர்களும் பிரதான வீதி வழியாக விழிப்புணர்வூட்டும் முகமாக உலா வந்தனர்.

அத்துடன் உயர் குருதி அழுத்தத்தால் பாதிப்புக்குள்ளானவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் உணவுக் கண்காட்சியாக காண்பிக்கப்பட்டு, அவ்வுணவுப்பண்டங்கள் சம்பந்தமாக போதியளவு விளக்கங்களும் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பரால் வழங்கப்பட்டன.





அத்தோடு, உயர்குருதி அழுத்தம் தொடர்பாகவும், அதனைத் தடுப்பது சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களும் இதன்போது விநியோகிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




காலைக்கதிர் Kalaikkathir

## சுயாட்சியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலனித்துவத்தின்வகிபாங்குமிகமுக்கியத்துவம் வாய்ந்தது. பிரித்தானிய காலனித்துவம் தனது பேரரசின் புவிசார் நலன்களுக்காக, சிறி லங்காவின் கேந்திரத் தன்மையின் முக்கியத்துவத்தை தனது இராணுவ நலன்களுக்காகத் தக்க வைப்பதற்காக ஒற்றையாட்சிஅரசியல்அலகாககட்டமைத்தது. ஒற்றையாட்சி அரசியல் அலகு எப்போதுமே பெரும்பான்மான்மையிடம் அதிகாரத்தை தக்க வைத்துகொள்ளும். பிரித்தானிய காலனித்துவத்திடம் பரிசாகக் கிடைத்த ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பை, தமிழ் இன அழிப்பிற்கான ஒரு கருவியாக சிங்கள-பௌத்த பேரினவாதம் ஸ்ரீலங்காவின் சுதந்திரத்தின் பின்னான அரசியல் வரலாற்றில் பயன்படுத்தியது.

19ஆம் நூற்றாண்டில் நவீன சிங்கள- பௌத்த பெருந்தேசியவாதம், காலனித்துவத்தின் அடக்குமுறை உத்திகளை உள்வாங்கி, வன்வலுவை பயன்படுத்தி தமிழர் தேசம் மீதான பெரும் போரைத் திணித்தது. அப்போரை மகாவம்ச, இதிகாச வரலாற்றுப்புனைவின்விவரணங்களுக்கூடாக நியாயப்படுத்திக்கொண்டது. இந்த வரலாற்று விவரணங்களுள் ஸ்ரீலங்கா ஒற்றையாட்சித் தன்மையை சரியெனக் காட்டி, ஏக தேச-நாட்டை சிங்கள -பௌத்த நாடாகக் கட்டமைக்க, பூர்வீக தமிழர் தாயகத்தை அபகரிக்கின்ற அரசியல் செயற்திட்டத்தை முன்னெடுத்தது. 2009ற்கு முன்னர் தமிழர் தாயகத்தை அபகரிக்கரிப்பதற்கு இராணுவ வன்வலுவைப் பயன்படுத்திய கொழும்பு அதிகார மையத்தை கையகப்படுத்திய அரசாங்கங்கள், 2009 க்குப் பின்னர், பௌத்த மதத்தையும், அபிவிருத்தியையும், மென் வலுவாகப் பயன்படுத்தி தமிழர் மீதான அடக்குமுறையையும்,தமிழரின்பூர்வீகதாயகப் பரப்பான வடக்கு-கிழக்கையும் தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்ட தமிழ் இன அழிப்பிற்கூடாக அபகரித்து வருவதும், தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயமாக்குவதும் எம் கண்முன்னேநடந்தேறிக்கொண்டிருக்கின்றது.

21ஆம் நூற்றாண்டில் ஏக துருவ உலக ஒழுங்கிற்கான போட்டி பல முனைகளில் நடைபெற்றுக்கொண்டிருப்பதை அவதானிக்கும்போது, ஏக துருவ பேரரசுக் கட்டமைப்பு,தனதுபுவிசார்நலன்களுக்காகஎந்த விலையையும் கொடுக்க தயாராகவுள்ளதை, அன்று முள்ளிவாய்க்காலும், இன்று பலஸ்தீனமும் வெளிக்கொண்டு வருகின்றன. தமிழ் இனத்தின் அடக்குமுறைக்கெதிரான விடுதலைப்போராட்டம்வெறுமனே இலங்கை அரசிற்கெதிரான போராட்டம் மட்டுமல்ல ஏக துருவ பேரரசை கட்டமைக்க முயலும் உலக ஒழுங்கிற்கெதிரான போராட்டமும் என உணர்ந்த மேற்குலக வல்லாதிக்க சக்திகள், ஸ்ரீலங்கா அரசை கருவியாகப் பயன்படுத்தி தமிழ் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை 2009 இல் இரும்புக்கரம் கொண்டு மௌனிக்கச் செய்தன. தமிழ் இன அழிப்பில் ஸ்ரீலங்கா அரசு பிரதான குற்றவாளியாக அடையாளங் காணப்பட்டிருந்தாலும் , ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் தமிழ் இன அழிப்பு குற்றப் பொறுப்பில் உடந்தையர்களாக அடையாளம் காணப்பட்டன.

தற்போது அதிகாரத்திலுள்ள அரசாங்கம், தமிழ் இனத்தின் நில மீட்பை மையப்படுத்திய விடுதலைப் போராட்டத்தை, இனவாதமாகச் சித்திகரிக்க முயற்சிக்கின்றது. இனவாதமாகச் சித்தரிப்பதன் மூலம் அதை உள்ளூர் பிரச்சினையாகசோடித்து, ஈழத்துதமிழர்களின் தேசத்திற்கான அரசியல் வேணவாவையும், அரசியல் அறக்கோரிக்கைகளையும் இல்லாதொழித்து, இலங்கை சிங்கள-பௌத்த ஏக அடையாளத்துடன் கட்டமைக்க முனைவது, இத்தீவின் பல்லினத்தன்மையை சாகடிப்பதாகும். தற்போதைய அரசாங்கம் சிங்கள- பௌத்த பெருந் தேசியவாத விழுமியங்களைநிலைநிறுத்திஸ்ரீலங்காவை ஏக அரசியல் - மத பண்பாட்டு நாடாக கட்டியமைப்பதன் மூலம் சிங்கள-பௌத்த மக்களுக்கு விசுவாசியாக காண்பிப்பதோடு, ஏக துருவ பேரரசை கட்டமைக்க முயலும் உலக ஒழுங்கின் வல்லாதிக்கத்திற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானதாகக் தோன்ற முயற்சிக்கின்றது. தமிழ் தேசம் வரலாற்றுப் பட்டறிவுக்கூடாகப் பயணித்தது என்பதை அண்மைய அரசியல் தெளிவுள்ள முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்இனஅழிப்புமறுப்பைதற்போதைய அரசாங்கமும்தனது அரசியல்நாடகத்தில்தக்க வைத்துக்கொண்டுள்ளது. இன அழிப்பின் மறுப்பே இன அழிப்பின் இறுதி ஆயுதமாகும் என்ற வரிகள் தற்போது ஆட்சிக் கதிரையில் உள்ளவர்களுக்கும்பொருந்தும்என்பதையும் பதிவிட்டே ஆக வேண்டும். தமிழ் இன அழிப்பை நினைவு கூர்வதற்கான நினைவுச் சின்னங்களை கட்டமைக்க தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர் தேசத்திலும் தடையை அமுல் படுத்தி வருகின்றது. தமிழ் இன அழிப்பு பொறுப்பு கூறலிலும், அதற்கான நீதிப் பொறிமுறையிலும் அநுர அரசாங்கம் தட்டிக் கழிக்கும் போக்கை கையாண்டு வருவது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

இலங்கையின் உள்ளூர் விசாரணைப் பொறிமுறையில் நம்பகத் தன்மையை இழந்த ஒட்டுமொத்தத் தமிழ் இனம், 2009 இலிருந்து சர்வதேச விசாரணைப் பொறிமுறையைக் கோரி வருகின்றது. தமிழ் இன அழிப்புக்கு நீதி வேண்டிய சர்வதேச விசாரணைப்பொறிமுறையின்அவசியத்தை வலியுறுத்துவதற்கான போராட்டங்கள் வினைத்திறனாக முன்னெடுக்கப்பட வேண்டியகாலத்திற்குள்தமிழ்இனம்வலிந்து தள்ளப்பட்டுள்ளது.தமிழ்இனஅழிப்புகுற்றத்தை மலினப்படுத்துகின்ற செயன்முறையில் ஈடுபடும் தமிழ் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் கண்டனத்திற்குரியவை மட்டுமல்ல, அவை தமிழின விடுதலைப் போராட்டத்தின் திசையை மாற்றுவதோடு, ஸ்ரீலங்கா அரசிற்கும், உலக வல்லாதிக்க சக்திகளுக்கும் விலை போனதாக வரலாறு அவர்களை நினைவுகொள்ளும்.

தற்போது ஆட்சி அமைத்த அநுர அரசாங்கம், தமிழ் இனத்தின் கூட்டு அரசியல் வேணாவைபுறந்தள்ளிவருவதோடல்லாமல், தமிழ் தேசியத்தின் விழுமியங்கள் மீதான நம்பிக்கையை உடைத்து வருகின்றது. அதை ஒரு போர் முறையாக முன்னெடுக்கின்றது. தமிழ்தேசியத்தின்நம்பிக்கைவிழுமியங்களை தற்போதைய உலக ஒழுங்கிற்கு பொருத்தப்பாடற்றதாக கட்டமைத்து, தமிழ் இனத்தின் கூட்டு அரசியல் நம்பிக்கை மீதான உளவியல் போரை கட்டவிழ்த்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. தமிழ் தேசியத்தின் நம்பிக்கை மீது தொடுக்கப்படும் போர், ஈழத் தமிழினம் முள்ளிவாய்க்காலில் சந்தித்ததை விட மிகக்கொடூரமான போர், தமிழ் இனத்தின் கூட்டு இருப்பினதும் அதனது அடிப்படைப் பண்புகள் மீதும் தொடுக்கப்படும் போர்.

தற்போது எமக்கு முன் உள்ள வரலாற்றுத் தெரிவு தமிழ் தேசியத்தின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தி அக் குடையின் கீழ் நம்பிக்கை வேறுபாடுகளுடன் அல்ல, உத்தி வேறுபாடுகளுடன் ஒன்று கூடுவது. இது எம் இனத்திற்கு வரலாறு தரும் இறுதித் தெரிவாகவும் நோக்க வேண்டி இருக்கும். இவ் வரலாற்றுக் கடமையிலிருந்து தவறுவதை வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. வரலாறு கொடுக்கும் இறுதி சந்தர்ப்பத்தை நழுவவிடாது, தமிழ் தேசியத்தின் கீழ் ஒன்றுகூடி தமிழ் இன அழிவிற்கான நீதி கோரி அதற்கான பெரு வழி வரைபடத்தை உருவாக்கி, எமக்காகவும், எம் தேசத்திற்காகவும், தேச இன விடுதலைக்காகவும் இறந்து போன எம் மறவர்களையும், இரத்த சொந்தங்களையும் நினைவு கூர்வதோடல்லாமல் அவர்களது கனவு நனவாக, இந்த இரத்தம் தோய்ந்த மண்ணிலிருந்து உறுதி பூணுவோம்.

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழின எழுச்சியின் அடையாளம். தமிழ் இன அழிப்பை முள்ளிவாய்க்கால் திடலில் நினைவு கூர்வது மீண்டும் எம்தினத்தின் எழுச்சியை சுட்டி நிற்கின்றது. ஈழத்தமிழ் இனமாக சிங்கள அரசு அடக்குமுறைக்கெதிராகவும், சிங்கள ஒற்றையாட்சி அரசியல் அலகை தனது புவிசார் நலன்களுக்காகதக்கவைத்துக்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்பின் அடக்குமுறைக்கெதிராகவும், போராட அணிதிரள்வதை தவிர வேறு எவ்வித தெரிவும் எமக்கு முன் வைக்கப்படவில்லை.

இரத்தம் தோய்ந்த இம் மண்ணிலிருந்து போராட, கனத்த காற்றுச் சுமந்து வரும் எம்மவர்களின் நினைவுகளின் மீதும், நாம் கொண்டிருக்கும் தமிழ் இன விடுதலை நம்பிக்கை மீதும் சபதம் செய்வோம்.

1. சிங்கள-பௌத்த மயமாக்கப்படும் தமிழ் தாயகத்தை தடுக்கவும், தமிழ் தேசியத்தை நாளாந்த வாழ்வியலாக்கவும்,

2. ஈழத்தமிழ் இன அழிப்பில் சர்வதேச நீதி வேண்டி, அரச பொறுப்பையும், மேற்குலக நாடுகளின் உடந்தைத் தன்மையையும் வலியுறுத்தி, குற்றவாளிகளை குற்றவியல் நீதி மன்றத்தின் முன் நிறுத்தவும்,

3. தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக் குரியவர்கள் என்பதையும், தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், ஒரு போதும் பாரதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தவும்,

4. கூட்டு ஈழத்தமிழர் இருப்பின் மீது கட்டவீழ்க்கப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட தமிழ் இன அழிப்பை தடுக்கவும்,

5. தமிழ் தேசிய நம்பிக்கையின் உறுதி கொண்டுஒருகுடையின்கீழ்தமிழ்இனஅடக்கு முறைக்கெதிராக தமிழ் இன விடுதலையை நோக்கி முனைப்புடன் தொடர்ந்து போராட எமது மக்கள் பலத்தை நம்பி தொடர்ந்தும் அடிபணியாது போராடுவோம்.

## வெள்ளவத்தைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் பயங்கரவாதிகளையே அழித்தனர். புலிகளை நினைவுகூர முடியாது என்று கோசமிட்டு நினைவேந்தல் பொதுச்சுடர் நாட்டப்பட்ட இடத்துக்கு செல்ல முயற்சித்தனர். பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சிங்கள ராவய அமைப்பினர் கடற்கரை பகுதிக்குள் செல்ல இடமளிக்கவில்லை.

ஏற்பாட்டுக் குழுவினர் மத அனுஸ்டானத்துடன் நினைவேந்தலை தடையின்றிநிறைவுசெய்து, அனைவருக்கும் கஞ்சி பரிமாறினர்.

நினைவேந்தலில்கலந்துக்கொண்டவர்கள் கடற்கரை பகுதியில் இருந்து வெளியேறும் போதுசிங்களராவயஅமைப்பினர்அவர்களை நோக்கி 'கொடியா, டயஸ்போரா என்று கூச்சலிட்டனர்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணு சேவை அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற பிரிகேடியர் செனரத் கொஹொன தெரிவித்தார்.

போர் வீரர் நினைவு நாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை நேற்று ஞாயிறுக்கிழமைமேற்பார்வைசெய்தபின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். சனிக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்த தேசிய போர் வீரர் தினம் பற்றிய அறிவித்தலில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் இந்த நிகழ்விற்குத் தலைமை தாங்குவார் என்று அறிவித்திருந்தார். நிகழ்வில் முன்னாள் முப்படைத் தளபதிகளான சரத் பொன்சேகா, வசந்த கன்னங்கரா, ரொஷான் குணதிலக ஆகியோர்பங்கேற்பர்என்றுகூறப்பட்டபோதும் ஜனாதிபதி பங்கேற்காதது குறித்துப் தெற்கில் பல கேள்விகள் எழுப்பியிருந்தன. இந்த நிலையில் ஜனாதிபதி தலைமையில்தான் நிகழ்வே நடக்கிறது என்று நேற்றுத் தெளிவுபடுத்தப்பட்டது.

நாட்டின் இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பைப் உறுதிப்படுத்துவதில் தன்னலமின்றி பணியாற்றியவர்களை கௌரவித்து நினைவு கூரும் வகையில் இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கோட்டை ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள தேசிய போர்வீரர் நினைவு தூபியில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று பிரிகேடியர் (ஓய்வு) செனரத் கொஹொன தெரிவித்தார்.

ஜனாதிபதியும்முப்படைகளின்தளபதியுமான அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இந்நிகழ்வுகள்இடம்பெறவுள்ளன. நாட்டிலுள்ள மார்ஷல்பதவிநிலைகளைவகிக்கும்முன்னாள் படைத் தளபதிகள் இதில் சிறப்பு அதிதிகளாகப் பங்கேற்கவுள்ளனர். அதற்கமைய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அட்மிரல் ஒப் த ஃப்ளீட் வசந்த கரன்னகொட மற்றும் மார்ஷல் ஒப் த எயார்போர்ஸ் ரொஷான் குணதிலக ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பிற்காக தங்கள் உயிரை தியாகம் செய்த முப்படைகளின் துணிச்சல்மிக்க வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், இந்த வருடாந்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. உயிரிழந்த ஆயுதப்படை வீரர்களின் நினைவைப் பாதுகாப்பதில் அமைச்சு மற்றும் முப்படைகளின் உறுதியான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

30 ஆண்டு கால உள்நாட்டுப் போரை நிறைவு செய்வதற்காக 27,000 படை வீரர்கள் நாட்டுக்காக தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கான வீரர்கள்அங்கவீனமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரையும்கௌரவிக்கும்வகையிலான நிகழ்வுகள் நாடளவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. போர் வீரர் நினைவு தினத்தை முன்னிட்டு முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் துறையினரால் நாடு தழுவிய சமூக நலத் திட்டங்களும் மேற்கொள்ளப்படும் - என்றார்.

## தனியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சு அறிவித்துள்ளது.

1921ஆம் ஆண்டு 20ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 2025.03.28 அன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட தீர்வுக்கான ஆரம்ப அறிவிப்புகள் தொடர்பான சமூகத்தில் எழுந்துள்ள தவறான கருத்துக்கள் மற்றும் தவறான புரிதல்கள் நீங்கும்வரை, குறித்த வரைபடப் பகுதிகளில் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின்படி அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என காணி அமைச்சு அறிவித்துள்ளது.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2025.03.28 அன்று வெளியிடப்பட்ட 2430 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1921 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் மூலம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அளந்து தயாரிக்கப்பட்ட 07 நில அளவை கிராம வரைபடங்கள் தொடர்பாக, 07 நிர்ணய அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தல்கள் மேற்கூறப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 04ஆம் பிரிவு மற்றும் 01 ஆம் உப பிரிவின் கீழ் பிரத்தியேகமாக குறிப்பிடப்பட்டுள்ள காணிக் கட்டளைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதிகளில் காணிகளின் உரிமையை தீர்த்து வைப்பதற்காக மட்டுமே விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், எந்த வகையிலும் காணிகளை அரசுடமையாக்கும் அல்லது கையகப்படுத்தும் விளம்பரங்கள் ஏதும் தயாரிக்கப்படவில்லை.

தீர்வுக்கான ஆரம்ப அறிவிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பதிகளுக்கு ஏதேனும் உரிமைகள் உள்ள தரப்பினர் மூன்று மாதங்களுக்குள் தங்களின் உரிமைகள் அல்லது உரிமைக் கோரல்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

அவ்வாறு சம்பந்தப்பட்ட உரிமைக் கோரல்களை ஆய்வு செய்த பின்னர் உரிய காணித் துண்டுகளை களத்துக்குச் சென்று ஆய்வு செய்து, காணிகளை அளந்து ஒதுக்கீடு செய்ததன்பின்னர், உரிமைகோருபவர்களுக்கு உரிய முறையில் தீர்த்து வைக்கப்படும்.

அவ்வாறு தனிப்பட்ட முறையில் தீர்த்து வைக்கப்படுகின்றன நிலங்கள் முறையாக காணிப் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டு, இறுதி தீர்வு உத்தரவு வர்த்தமானிஅறிவித்தலில்பிரசுரிக்கப்படுவதன் மூலம், ஒவ்வொரு நிலத்தின் உரிமையும் தனியாருக்குரியதா அல்லது அரசுக்குரியதா என்பது அறிவிக்கப்படும் என்றுள்ளது.

## புலிகள் என்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயகத்தையும் மக்களையும் கொடூரமான புலிபயங்கரவாதஅமைப்பிலிருந்துவிடுவித்து இன்றுடன்16ஆண்டுகள்நிறைவடைகின்றன.

இந்த நோக்கத்திற்காக தங்கள் கண்கள், காதுகள், சதை, இரத்தம், வியர்வை மற்றும் தங்கள் உயிரைக் கூட தியாகம் செய்த அனைவருக்கும், இராணுவம், விமானப்படை, கடற்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படைகளின் மாவீரர்கள் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் நாம் அஞ்சலி செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# புத்தளத்தில் பல்கலை வழிகாட்டல் நிகழ்வு

(சியாஜ்)

புத்தளம் இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பு மற்றும் புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி நிர்வாகம் ஆகியன ஒன்றிணைந்து இம்முறை புத்தளம் நகரில் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க காத்திருக்கும் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வொன்றை சனிக்கிழமை புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடத்தியது.

இந்த நிகழ்விற்கு சுமார் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். பொது வழிகாட்டல் நிகழ்வு மற்றும் துறைசார் வழிகாட்டல் நிகழ்வு என இருகட்டங்களாக இந்த நிகழ்வு நடைபெற்று முடிந்தது.

நிகழ்வின் பொது வழிகாட்டல் வளவாளர்களாக புத்தளம் இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பின் முன்னாள் தலைவரும், தற்போதைய ஆலோசனைக் குழு உறுப்பினரும், பிரபல ஊக்குவிப்பு பேச்சாளரும், தொழில் வழிகாட்டல் ஆலோசகரமான எம்.ஆர்.எம்.ஷவ்வாபும், துறைசார் வழிகாட்டல் நிகழ்வுகளை அந்தந்த துறைசார் வளவாளர்களாக புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், தற்போதைய ஆலோசனைக் குழு உறுப்பினரும், கொழும்பு பல்கலைக்கழக கணக்கியல் துறையில் சிறப்பு பட்டம் பெற்றவரும், திறந்த பல்கலைக்கழக புத்தளம் கல்வி நிலையத்தின் வருகைதரு விரிவுரையாளருமான திருமதி ஆர்.ரப்பத், புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் பிரதித் தலைவர்களும் ஒருவரான தற்பொழுது வயம்ப பல்கலைக்கழகத்தில் தனது பட்டப் படிப்பை தொடரும் மற்றும் ஸீஏ பாடநெறியை தொடர்பவருமான செல்வி எம்.ஏ.அம்ஜிதா, புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் நிர்வாகக் குழுவில் செயல் திட்ட ஒருங்கிணைப்பாளராகச் செயற்படும் எம்.ஹனான், மற்றும் புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் அங்கத்தவர்களில் ஒருவரும், களனி பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை தொடர்பவரும், ஸீஏ பாடநெறியை தொடர்ந்து கொண்டிருப்பவருமான செல்வி இம்ரத் மர்வா மற்றும் புத்தளம் இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் அங்கத்தவர்களின் ஒருவரும், வயம்ப பல்கலைக்கழகத்தில் தனது பட்டப் படிப்பை தொடர்பவரும் ஸீ.ஏ. பாடநெறியை தொடர்பவருமான செல்வி.பீ.என்.எப். சப்னா ஆகியோர் செயற்பட்டனர்.





# சான்றிதழ்கள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக பணியாளர் மேம்பாட்டு நிலையமும் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து நடத்திய சிங்களம் மொழி (இரண்டாவது அதிகாரபூர்வ மொழி) கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்ச்சியும் பலகலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் பணியாளர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எச்.எம். நிஜாம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். கற்கை நெறியின் இணைப்பாளர் சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபாரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரதிப்பணிப்பாளர் கயன் பொதுப்பிடிய கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டார்.

விசேட அதிதிகளாக முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.ஏ.எல்.ஏ. ஹலிம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி அஷ்ஷேய்க் எம்.எச்.ஏ. முனாஸ், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் முன்னிலை அதிதிகளாக தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி அலுவலர் தேசகீர்த்தி தங்கராஜ் கல்யாணி மற்றும் வளவாலர்கலான ஜெ. ஏ. சனத் ஜயசிங்க, சரோஜா தேவநாயகம், எம். யசோதர்னி ,ஜெ. கல்பணி மற்றும் எஸ்.எம். ஜுவல்லரியின் உரிமையாளர் எஸ்.எம். றிப்னாஸ், எஸ்.எம்.எம். அப்சார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'அரசகரும மொழிக் கொள்கை ஊடாக இலங்கை பிரஜைகளுக்கு மகிழ்ச்சிகரமான சேவை ' எனும் தொனிப்பொருளின் கீழ் பல்கலைக்கழக ஊழியர்கள் தங்கள் கடமைகளை இலகுவில் ஆற்றும் பொருட்டு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து இவ்வாறான கற்கை நெறிகளை நடத்தியது குறிப்பிடத்தக்கது.









# மாணவன் நீரில் மூழ்கி இறப்பு

(பர்ஸான்)



பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தியாற்றுப் பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

நண்பர்களுடன் சேர்ந்து சந்தியாற்று நீரோடையில் குளித்துக் கொண்டிருக்கும் போதே மாணவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மரணமடைந்தவர் ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்று வரும் ஓட்டமாவடி பி.எஸ்.குறுக்கு வீதியில் வசித்து வரும் முகம்மது அலிகான் அஸ்லூரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது வொலிவோரியன் பொது விளையாட்டு மைதானத்தை செப்பனிடும் இரண்டாம் கட்டப் பணி

(ஸாகிர்)

சாய்ந்தமருது வொலிவோரியன் பொது விளையாட்டு மைதானத்தை செப்பனிடும் இரண்டாம் கட்டப் பணி கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழுத்தலைவரும் அரசமைப்பு பேரவையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட செப்பனிடும் பணியில் பல கனரக இயந்திரங்களைக் கொண்டும் விளையாட்டுக் கழகங்களின் பங்களிப்புடனும் மைதானம் விளையாடுவதற்கு ஏற்ற வகையிலும் செப்பனிடப்பட்டு, அதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகளும் செவ்வனே இடம்பெற்றன.

செப்பனிடும் பணியானது அபூபக்கர் ஆதம்பாவா எம்.பி.யின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மைதானத்தை செப்பனிடுவதற்கு இயந்திரங்களைத் தந்துதவிய கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை, அட்டாளைச்சேனை பிரதேச





சபை மற்றும் ஆதம்பாவா கன்ஸ்ட்ரக்ஷன் குழுவினருக்கும் ஆதம்பாவா எம்.பி. தனது நன்றியினைத் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் திடீரென வீசிய மினி சூறாவளி

(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பெரு நிலப்பரப்பிற்குட்பட்ட போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சனிக்கிழமை நண்பகல் திடீரென வீசிய மினி சூறாவளியால் அப்பகுதியில் வீடுகள் சில சேதமடைந்துள்ளன என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.





இந்நிலையில் போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளாந்தோட்டம் எனும் கிராமமத்தில் வீட்டு முற்றத்தில் நின்ற வானுயர்ந்த தென்னை மரம் ஒன்று வீட்டின் மீது வீழ்ந்துள்ளது. இதனால் வீட்டிலிருந்தவர்கள் மயிரிழையில் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு திடீரென ஏற்பட்ட மினி சூறாவளித் தாக்கத்தால் வீடுகள் சேதடைந்துள்ளதுடன், வீட்டிலிருந்த பாவனைப் பொருள்களும், பயன்தரும் தென்னைமரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். தமக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தன என நிலைமை தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மின்வயரின் மீது முறிந்து வீழ்ந்த மரம் மின்சார சபையினர் அசண்டையீனம்



வவுனியா பூந்தோட்டம் சந்தியில் மின்சார வயரின் மீது தென்னை மரம் முறிந்து வீழ்ந்து பலமணி நேரமாகியும் அதனை அகற்றுவதில் மின்சார சபை அசண்டையீனமாக இருப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியாவில் சனிக்கிழமை காலை முதல் கடும்காற்றுடன் கூடிய மழை பெய்தது. இந்த நிலையில் பூந்தோட்டம் சந்தியில் வீதிக்கரையில் நின்ற தென்னை மரம் முறிந்து மின்சார வயரின் மீது வீழ்ந்து ஆபத்தான நிலையில் உள்ளது.

இது தொடர்பாக மின்சாரசபைக்கும். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கும் பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மரம் முறிந்து நான்கு மணி நேரம் கடக்கின்ற நிலையிலும் அது இன்னமும் அகற்றப்படவில்லை.

குறித்த மரம் பாதையின் நடுவில் ஆபத்தான முறையில் காணப்படுகின்றது. பொதுமக்கள் அதனூடாகவே பயணம் செய்துவருகின்ற நிலையை காணமுடிகின்றது. 100

# சிறுவர் சந்தை

(சியாஜ்)

கற்பிட்டி அந் நூர் பாலர் பாடசாலையின் 37 ஆவது வருடாந்த சிறுவர் சந்தை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலர் பாடசாலை வளாகத்தில் அதிபர் எஸ்.எம் அரூசியா உம்மா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கற்பிட்டி கிளையின் செயலாளரும் புதுப் பள்ளியின் பேஷ் இமாமுமான அஷ் ஷெய்க் மிக்தாத் (ரஹ்மானி) மற்றும் அந் நூர் பாலர் பாடசாலையின் செயலாளர் எம்.ஏ.எம் நாசர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறார்களின் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் போன்ற இணைபாடவிதான செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கோடு வருடாந்தம் இடம்பெறும் சிறுவர் சந்தை நிகழ்வு 37 ஆவது வருடமாகவும் சிறப்பாக இடம்பெற்றதாகவும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்கள் மற்றும் பாலர் பாடசாலையின் உதவி அதிபர் எம்.எப் திப்னா பானு ஆசிரியர்களான ஏ.எப் அம்னா, எஸ்.எப் சுமையா, ஏ.எஸ்.எப் றீஹா ஆகியோருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் எஸ் எம் அரூசியா உம்மா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.










# பல சபைகளில் தொங்கு நிலை ஏற்பட்டுள்ள நிலையில் எங்கள் ஆதரவுகளை பல தரப்புக்கள் நாடுகின்றனர்

## கஜேந்திரகுமார் எம்.பி. கூறுகிறார்

(ஹஸ்பர்)

தம்பலகாம் பிரதேச சபை தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் விகிதாசர முறையில் ஒருவர் தெரிவாகியநிலையில்அனைத்துசபைகளிலும்தொங்கு நிலை காணப்படுகின்ற இடத்தில் எங்களுடைய ஆதரவை நாடி பல தரப்புக்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தம்பலகாமம் பகுதியில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அடுத்து கஞ்சி பகிரும் நடவடிக்கை இடம் பெற்றது அதில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார் .

தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

அந்தவகையில்அந்த விடயங்களைநேரடியாக இங்கு இருக்கக் கூடிய மக்களுடன் பேசி அவர்களுடையகருத்துக்களையும் பெற்று தமிழ் தேசிய பேரவையின்மத்திய குழுவுடன் தீர்மானிக்கவுள்ளோம்.



தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படு கொலையின் கடைசி நாளுக்கு முந்தைய நாள் அந்த வகையில் இவ்வாரம் முழுவதும் தமிழர் தாயக நிலப் பரப்பில் ஒரு சோகமான வாரமாக கடைப் பிடித்து முள்ளி வாய்க்காலில் நடைபெற்ற பொருளாதார பொருள் தடைகள் அனைத்து விதமான தடைகளையும் மீறி அந்த மக்கள் ஏதோ ஒரு வகையில் உயிரை தக்க வைக்க கஞ்சி குடித்ததன் ஊடாக அது மட்டும் தான் அவர்களுக்கு உணவாக இருந்தது.



அந்த வகையில்இனப்படுகொலையின்நினைவாக இவ்வாரம் முழுவதும் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர் பகுதிகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி எங்கள் மக்களுடன் பகிர்ந்து கொள்வது வழக்கம். முல்லைத் தீவு முள்ளி வாய்க்காலில் நடைபெற்றதை போன்று மிக மோசமான நிலைமை தென் தமிழ் தேசத்திலும் கிழக்கு மாகாணத்திலும் நடைபெற்றது. இதனை ஒவ்வொரு வருடமும் அந்த நினைவாக வாகரையில் நினைவு கூறுவது வழக்கம்.

இதனை எமது கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரனுடன் நிறைவேற்றுவதும் வழமை. - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# அற்ப அரசியலுக்காக இனவாதம் பேசும் அரசியல் வியாபாரிகளுக்கு காலம் சிறந்த பாடம் கற்பிக்கும்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

அற்ப அரசியலுக்காக இனவாதம் பேசி தேசிய மக்கள் சக்தியையும், தமிழ் பேசும் மக்களையும் பிரிக்க முற்படும் அரசியல் வியாபாரிகளுக்கு காலம் சிறந்த பாடத்தை கற்பிக்கும். - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அத்துடன், எப்படியான அரசியல் சூழ்ச்சிகள் வகுக்கப்பட்டாலும் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் தேசிய மக்கள் சக்தியை கைவிட்டு செல்வதற்கு தமிழ் பேசும் மக்கள் தயாரில்லை எனவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குபின்னடைவுஏற்பட்டுவிட்டதாகஅரசியல் களத்தில் எதிரணிகள் ஒப்பாரி வைக்கின்றன. உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவை, பொதுத்தேர்தல்முடிவுடன்முடிச்சிபோடுகின்றன. கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலுடன் ஒப்பிட்டுபார்த்தால் நிலைமை புரியும்.

அதேபோலதேசியமக்கள்சக்தி266சபைகளைக் கைப்பற்றியுள்ளது.வடக்கிலும்150இற்குமேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். எனவே, பின்னடைவு, வீழ்ச்சி எனக் கூறப்படுவதெல்லாம் அப்பட்டமான பொய். மக்கள் ஆதரவு எமக்கு என்றும் உள்ளது. ஏனெனில் நாம் மக்கள் அரசியலை முன்னெடுப்பவர்கள்.

உண்மையான நல்லிணக்கம்மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் முழு வீச்சுடன் செயற்படுகின்றது. அதற்கு மக்களும் துணை நிற்கின்றனர். எனினும், இனவாதம் பேசி, மக்களைப் பிரித்தாலும் அரசியலை சிலர் முன்னெடுக்க முற்படுகின்றனர். அப்படியானவர்களுக்கு காலம் நிச்சயம் பதில் சொல்லும். - என்றார்.



# கொடிகாமத்தில் மக்கள் இயக்க முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி

(சுபேசன்)

கொடிகாமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் இயக்க முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால்நினைவுக்கஞ்சிமக்களுக்கு வழங்கப்பட்டது.





இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா கலந்து கொண்டிருந்தார். அதேநேரம் மக்கள் இயக்க முன்னணியால் பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் பூநகரி ஆகிய இடங்களிலும் முள்ளிவாய்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2025இல் வெளியிடப்பெற்றது